265

786

ஹ-௳

பிஸ்மில்லாஹ்.

-: ஆஷ்க்குமணி :-
அலங்காரமாலை.

இஃது

சிலோன், மட்டக்களப்பு, ஒலுவில்

தா. ம. செய்யிது இப்ருஹீம்

என்பவரால்

இயற்றியதை

தமது உஸ்தாது ஷைகுமுஹையித்தீன் அவர்களால்

பார்வையிடப்பட்டு

முதல் பதிப்பு

திருவாரூர் "எட்வர்ட் பிரஸில்" பதிப்பிக்கப்பெற்றது.

1935.

Q7:417
N35
85757

முகவுரை.

நிகரற்ற அருளாளனும் குறைவற்ற அன்புடையோனுமாகிய ஆண்டவன் ஹக்குசுபுஹானஹுவத்தஆலா நம் யாபேர்களையும் இருவுலகங்களிலும் ஒன்றுபோல் ஆசீர்வதிப்பானாகவும் ஆமீன்.

எனது இகபரம் இரண்டினும் நற்பேறு பெறுகும் தயாள குணமும் நற்புத்தியும், நன்நன்றியும் என்றென்றும் என் கல்வைவிட்டு மறவாத நபி முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் உம்மத்துகளாவாகிய என் சகோதரர்களே! யான் இல்மில்லாமல் சிலகாலம் அலைந்து திரிந்து என் உஸ்தாது ஷைகுமுஹையித்தீன் என்பவர்களிடம் யான் சென்று எனக்கு இல்மு படித்துக்கொடுங்கள் என்று கேட்டேன் அதற்கு அவர்கள் என்னைப்பார்த்துக்கேட்டதாவது : உனக்கு தாய் தகப்பன் இருக்கிறார்களா என்றார்கள் அதற்கு யான் சொன்னதாவது என் தகப்பன் காலஞ்சென்றார்கள், தாய் இருக்குறார்கள் என்றேன். அற்கு அவர்கள் சொல்வார்கள் உன் தாயார் ஆண்டவனிடம் (துஆ)க் கேட்டால் உன்கல்பாகிறது ஒளிவாகும் உன் தாய் மனம் உகந்தால் றப்பு உகந்துகொள்வானென்றார்கள் இவ்வாறுசொல்ல யான் கேட்டு உடனே என் தாயாரிடம் சென்று இவ்விஷயங்கள் யாவையும்சொல்லி என் தாயாருடைய இருபாதங்களையும்.பணிந்து என் கல்பு வெளிச்சமாகும்படி ஆண்டவனிடம் (துஆ)க் கேளுங்கள் என்று சொன்னேன். அதற்கு என்தாயார் என்னைக் கேட்டதாவது : மகனே! நீ இல்மு படித்தால் என்ன செய்குவாய் என்று கேட்டார்கள் அதற்கு யான் சொன்னதாவது : எனக்கு ஆண்டவன் இல்மைக் கொடுத்தால் அவனை மறக்காதிருப்பேன் முஸ்லீம்கட்கு யான் கற்றவரையிலும் என்னால் ஏண்டளவிலும் அறிவித்துக்கொடுப்பேன் என்று சொன்னேன். உடனே என் தாயார் அவர்கள் இருகைகளையுயர்த்தி ஆண்டவனே! என் பிள்ளை செய்யிதுஇப்றாஹீம் என்பவனின் கல்வை உன் முகமாய்த் திருப்பிக்கொள்ளும் உன்னுடைய முஹப்பத்தில் நின்றும் தீனில் தரிபடுத்தி ஈமானை நிறப்பமாக்கி மஃரிபாவின் சிற்றுகளை அறிவித்து தவ்ஹீது என்னும் ஓர்மையைக்கொடுத்து ஜென்னத்துல் பிறுதவ்ஸ் என்னும் சுவற்கம் சேரக்கிருபை செய்தருள் ஆமீன்! ஆமீன்! யாறப்பில் ஆலமீன் என்று ஆண்டவனிடம் கேட்டார்கள்.

அன்றிருந்து என்கல்பில் வெளியான இல்முகளை சேர்த்து ஆஷ்க்குமணி அலங்காரமாலை என்னும் புஸ்தகத்தை யான்பாடி நான்கு பாகங்களாய்பிரித்து, முதலாவது பாகம் என் பெண்ஜாதியின் பொருளுதவியால் அச்சியிலியற்றி வெளிவருவதால் தாங்கள் வாங்கி உங்களுடைய கல்பு என்னும் குகையில்பிடித்திருக்கும் கோபமென்னும் அழுக்கை, நீக்க நாடி குதறத்து என்னும் கையால் புகழென்னும் கோல் எடுத்து நாட்டமென்னும் துணியைச்சுற்றி அந்தக் குகையைத்துடைத்து அக்கில் என்னும் விளக்கை எற்றி ஒளிவு என்னும் கண்ணாடியில் தன் சுரூபத்தைப்பார்ப்பது போல் இந்த முதலாவது பாகத்தையும்பார்த்து இன்னும் 2, 3. 4-ம் பாகம் வரையிலும் பார்க்க ஆசையுடையவர்களாய் ஆண்டவனிடம் மற்றும் பாகங்களையும் நிறைவேற்றும்படி (துஆ)க் கேளுங்கள் என்று உங்கள் யாபேர்களிடமும் மன்றாடிக் கெஞ்சிக் கேட்குறேன் இன்னும் உங்கள் தாய் தந்தையர்களை குருவாகவே கொண்டாடிக் கொள்வதுடன் அவர்களின் மனதை சந்தோஷப்படுத்தி நற்பலனைப் பெறுவதற்காக இவ்விஷயம் அறிவித்தேன்.

தா. ம செய்யிது இப்ராஹீம்.
ஒலுவில், அக்கரைப்பற்று, மட்டுக்களப்பு.
2—3—35. சிலோன்.

புகளின் துதி.

அந்திபகலிரவு ஆகாயம்வளர்பூமிநீர்
ஆனபலவஸ்த்துகளையும்
முந்திபரிபூரணமாய் அமைத்துநீ
மூவுலகில்யாவுங்கூடிநிதம்
சந்திப்போடு அணைத்துமனமொத்துமது
ஜாதிபலபிரிவானதில்
பிந்திபிறப்பின்சாணுகவெளிவந்து இப்ரூஹீம்
பெற்றறிவைமனுவோர்க்குகூறவாமே. (1)

கூறும்ஆஷ்க்குமணி அலங்காரமாலை
குவலயத்தில்யாவேருமம்பார்க்க
ஏறும்மஃரிபாவில்யான்மனுவோர்க்கு
எடுத்துவெளியிலோதவென்ற
வாறும்பலநினைவுடன் குறுஆன்மொளி
வருகும்ஹதீதுகளைமுன்வைத்தாதி
ஊறும்இல்முஎன்கல்பில்என்னாளும்
உடயோனேகாப்பிதர்க்குநீயே. (2)

வேறு.

தன்னுகித்தானுகி தனித்தவொருமுத்துமாகி
கண்ணுகிகல்பாகி சுண்ணீர்ஒளிவுமாகி
மண்ணுகிமரமாகி மரமகிலுயர்பூவுமாகி
எண்ணுகிஎளுத்துமாகி எக்கின்மீதுமயிலுமாகி
பெண்ணுகிபிறப்பிறப்புமாகிபெற்றுநாம்வந்ததை
எண்ணுதஇன்சானுள்ளே குமுதலங்கு
மண்ணுதமாய்ச்சமைந்தகுகயில்மறைந்துஎன்
எண்ணுநினைவினுள்ளிருந்திலங்கும்
அல்லாஹவெண்ணும்பொருளே. (3)

வேறு.

பொருளானபுருக்கானில்உருவாகிவெளிவந்த
புகள்பெருகும்இன்சான்களே
அருளான்ஆஷ்குமணி அலங்காரமாலை
அடியேன்உரைசெய்குவதினுல்
மருளானபலகுறைகளனைத்தையுமகற்றிநீங்கள்
மனஹப்புடன்படிப்பீர்களாகில்
இருளானகுறைகளனைத்தையும்தீர்ப்பான்என்றும்
இறைவாநீஇத்தக்குகாப்பதாகும். (4)

786

பிஸ்மில்லாஹி.

ஆஷ்க்குமணி அலங்காரமாலை.

வெண்பா.

பாருமிந்த ஆஷ்க்குமணி அலங்கார மாலயதனை
சேருமின்னூல்மீது செல்வோம்—வாரும்
வளியதினிலேயே பாடிமனம்
தெளியவே அறிந்தவர்தமக்கு இது தேன்.

நூன் முகம்.

1. ஆதிபெரியோனேயாகுதாயே, ஆலமடங்கலும்நிறைந்த ஹாதீவே, சேதிவிரிவாகும்கல்புல்லாவே, செப்புகுறேன்என்னைத திரும்பிப்பாரு, ஓதிப்புகலுகிறேன்கவிதைபாட, ஓர்மைதவ்ஹீதுமுன்னில்வர, நீதிபெருகியஞானவாசல், நேரேதிறந்தெனக்குவெளியாகுமே.

2. வெளியில்வந்திடும்முஹம்மதரின், வேண்டும்கருணையால்கவிதைபாட, மொளியில்வந்து இலங்குமந்த, மோகமுஹம்மதரின் அருளினாலே, வளியைநாடியமாலைசொல்ல, வாயால்உங்களைக்கெஞ்சுகிறேன், விளியில்உருவாகிவெளியில்வந்து, விளங்கும் ஜெபறாத்தில் நிண்டதாலே.

3. நிண்டநிலையது ஜெபறாத்துலே, நிலைத்தஒளிவுறப்புல் ஆலமீனும், கண்டஒளிவதைமுன்னிலாக்கி, கருணைச்சிரங்கொண்டு சுஜூதுசெய்தால், விண்டகருமங்கள்பெருக்கமாக, விளங்கும் ஹக்குல்எக்கீனைக்கண்டதாலே, செண்டபுகளதால்கவிதைபாட, செப்புமுஹய்யித்தீன் அருளாகுமே.

4. அருளினால்யான்கவிதைபாட, ஆளும்மீருசாஹிபுவே, இருளும்பளிவந்தேறிடாமல், இரங்கும்கிளுநுநாயகமே, மருளை யகற்றியபொருளைக்காண, மன்னுகிருபைசெய்முன்னதாக, பொருளும்கலியாவில்உறைந்திருக்கும், புகழைஅறியவேகிருபைசெய்வாய்.

5. செய்யும்ஜெகமீது ஹிஜறத்து, செப்புமாயிரத்துமுன்னூற்றுஐம்பத்துமூன்றில், மெய்யாய்றமுலான்மாதம்தன்னில், மேன்மைஆரும்இரவுஅன்று, துய்யோன்கிருபையால்மனந்துறந்து, தொகுத்துஉரைப்பதற்குக்கருத்துண்டாகி, வையகமீதினில்மனுவோர்க்காக வழியைஅறியவேஅலைந்தேன்அல்லா.

6. அறியயானும்வேணுமென்று, அலைந்துதிரிந்தேன்அனந்தங்காலம், கறியேசோறுண்டுவயிர்வளர்த்தேன், கண்டதில்லை ஒருசுகமும், வெறியைஅகற்றியபொருளைக்காண, விளங்கிக்கிருபைசெய்யாறஹீமே, சிறியேன்என்றென்னைத்தள்ளாமலே, சேர்த்துகிருபையால்முன்னில்வாரும்.

7. வாரும்என தின்ஆசைநீங்கி, வையகமனுவோரின்கல்புபொங்கி, சேரும்முஃமீன்கள்கூட்டத்தோட, ஜென்னத்துல்பிறுதவ்சென்னும்சுவனஞ்சேர, ஆரும்உபகாரம்செய்வாரில்லை, அல்லாஉனையல்லாமல்ஒன்றுமில்லை, காருய்யாபேரயும்ஒன்றுபோல, கருதிவுலகினில்யான்கவிதைபாட.

8. பாடல்சொல்லவேமனதால்நாடி, பாரில்உரைக்குறேன்குறுஆன்தேடி, வாடல்வராமல்மலர்ந்திருக்க, வளர்ந்துவுலகெங்கும்பாரந்துவீச, நாடல்பெருகிடஆஷ்க்குமணி, நலமாம்அலங்காரமாலைசொல்ல, தேடல்செய்யிதுஒலிமார்களை, தெரிந்தென்மனதினில்காவலானேன்

9 ஆனபுகளிறைஉதிப்பினாலே, அஹதுஹதும்வாஹிதாகி, தானபுகளெங்கும்ஆசயாகி, தரித்தவுலகெங்கும்அறுவாஹாகி, தானமிதால்அஜ்சாமாகி, தாரணியிலின்சான்எனுமறுத்தபாவாய், வானம்புகளிறைறஹ்மானே, வந்தஇடமல்லோஅல்லாமுஹம்மது.

10. அல்லாமுஹம்மதாகவேஇருக்கும்நாளில், அறிந்தேன்லாயிலாஹஇல்லல்லாவை, பொல்லாஇபுலீசும்அத்தருணம், போற்றிஎன்னையுங்காற்றுக்கொண்டான், வெல்லவளிகளும்இல்லாமலே, வெளியில்அலைந்தேன்அனந்தங்காலம், நல்லாமனதினுள்ளுட்டிப்பார்க்க, நாயனின்கோலம்என்முன்னில்வந்தே.

11. வந்தவுடன்பார்த்தேன்இல்லைஅங்கு, வந்ததுகவிமாவில்லாஎண்டு, அந்தமுடனதுஇல்லையாச்சி, அறிந்தேன்இலாஹநாயன்இல்லைஎன்று, சிந்தைஉகந்துதான்இல்லாகண்டு, சேர்த்துஒதிடஒளியயாச்சு, முந்தஅல்லாகண்டவுடன், முழுதும்நாயனெண்டறிந்துகொண்டேன்.

12. அறிந்து ஹா-ு என்றஎழுத்தைதேடி, அலைந்தேன் உலகினில்காலமெல்லாம், முறிந்துபோகாமல்ஹா-ு வைநினைவில் மாத்திமாத்திய ஹா-ு ஹா-ு என்றேன், பறந்துவந்ததென்நினைவுவண்டாய், பார்த்துமனதினில்ஏற்றிக்கொண்டு, திறந்துகதவது வெளிஇலாகி, துலங்குது ஹா-ு அவன்பொருளே.

13. பொருளைக்கண்டுதான் இருளைப்பார்க்க, போகுமுன்னில்லைஎன்றதும்இதுவுமாகும், அருளைக்கண்டுதான் ஹா-ு வைப்பார்க்க, அளகாய்ப்பிரிந்சுது அல் ஹம்ததாக, மருளையகற்றிய பொருளைப்பார்க்க, மனுவைப்படைத்ததும்அய்ந்தனுசிற், இருளையகற்றியபொருளைபார்க்க, எங்கும்அவன் ஒளிவுகோலமாச்சே.

14. கோலம்ஆலமுல்மிதானுமாகி, கோர்த்துப்பார்க்கவே ஆலம்யாவும், வாலமஹ்பூபும்அல்லாவுமாய், வருந்திஇணங்கிய இருக்கும்நாளில், நாலாம்வேதத்திற்குநபியாய்வந்த, நாயன்முஹம்மதுபிறந்தகோலம், காலம்முழுதிலும்விளங்காமலே, காட்டுமிருகம்போல் நடந்தன்பாவி.

15. பாவியாஇருந்துயான்தவங்கும்போது, பாலகர்முஹம்மதுதானும்வந்து, தாவிக்கருணயால்என்னைச்சேர்த்து, தவியாதிருவென்றுமுஹம்மதேக, தாவிப்பிடித்துஎன்தலயில்ஏற்றி, தரித்துக்கல்பினில்இருத்திக்கொண்டு, ஆவிஅடங்குமுதல்என் அறிவைப்பார்தமேதன், அங்குவந்தமீம்இங்கிருந்தமீமாம்.

16. மீமும்மீமுமாய்க்கூடிருந்து, மேலோன்முஹம்மதென்றநாமங்கூறி, நாமுமிருபேரும்சேர்ந்ததாலே, நாடிப்பிறப்பவர்ஆதமாகும், ஹாமீமுமாய்குறுஆனிலே, ஹா,ஊ,என்றசொல் உள்ளதினல், நாமுமிருந்தல்லோவெளியிலேகி, நாடிஈமாங்கொண்டுஇசுலாமானோம்.

17. இசுலாமாய்ஈமான்கொண்டவுடன், இன்சான்என்றென்னைக் காணலானேன், அசுலாய்இன்சான்என்றசொல்லில், அடங்கிஇருந்திடும்எழுத்தாவது, பசுலாய்இரண்டுநூனுனதும், பாராமல்மறைத்திடுச்சீனுப் ஒன்று, விசுலாம்அலிபுஇரண்டுமங்கு வந்தவரலாறினைசொல்லக்கேளும்.

18. கேளுமுன்சொன்னஅனுசிற்அய்ந்து, கிடைத்தஇன்சான்என்றதும்அய்ந்தெழுத்து, நாளும்இதுகளைஅணைத்துப்பார்த்தால், நடத்துங்கருமங்கள்மிகுதமாகும்; வாளும்உடம்பினில் குறித்துப்பார்த்தால், வந்ததானங்கள்சொல்லஆகும்; ஆளும் றஹ்மானவன்உடம்புசெய்த, அதிசயமிதுவாகும்நபிஉம்மத்தே.

19. உம்மத்தாகியஇஃவான்களே, உள்ளசேதிகள்விள்ளக்கேளு, இம்மத்தாய்வருகும்நூனிரண்டையும், இணக்கிஇருகண்ணதாகவைத்து, தம்மதுவாகப்பார்வைகொண்டு, தனித்துஅலிபினில்ஒண்ணைச்சேர்த்து, செம்மையாய்சீன்சிற்றென்றோதி, சேரஓர்அலிபால்ஒளிவுண்டாச்சே.

20. ஒளிவால்உருவெல்லாம்தயாருகிய, உடலைக்கலயாமல் நிலயிலாக்கி, தெளிவானறிவயும்றெப்புமாக்கி, தெரிந்தெடுப்ப வன்அப்துமாக்கி, வழியாய்கணக்கெல்லாம்பூட்டிவைத்து, வன் னிகாகமென்றபேரும்வைத்து, களியாசுவாசத்திலஏறிப்பார்த் தால், கண்ணில்ஒளிவயும்காணலாமே.

21 காணும்ஒளிவதுகடுகுபோல, காணவரிதல்லோஉலக மீதில், ஆணும்பெண்ணுமாய்இணங்கும்போது, ஆவிகளண்டல் லோவெளியில்வந்து, ஊணுங்குடிப்பிலும்இருந்துமது, உறயவந் ததுன்மூளையாகும், வேணும்பலபல அறிவுபொங்கி, விளைந்துவெ ளிவந்தோம்மூளையாலே.

22. மூளைஎன்பதுபுத்தியாகும், மூழ்கிஇருட்பதுமுறை யித்தீனும், ஆளைஅறிவது அல்லாவாகும், அவனைஅறிவது அப்து மாகும், தாளைஇதழ்மலர்புஷ்ப்பவாசம், தரித்ததலமதுகல்புமாகு ம், வாழைமரம்போல்வளர்ந்ததாலே, வல்லோன்நமக்கிந்தமறதி விட்டான்

23. இந்தவிதமாகமறைந்திருந்து, இறயமறக்காமல்இரு ங்களென்றான், வந்தவழியினில்நோட்டமிட்டு, வரவைஅடியோ டுவிளங்கிப்பார்த்து, முந்தமனதினில்வந்தநாட்டம், முழுதும் நாயன்என்றறிந்துகொள்ளும், சொந்தமாய்அல்லாவைஅறியவெ ன்றால், சொல்லும்செய்கிடம்தோஸ்த்துமாகு.

24. தோஸ்த்தென்றால்நீதெண்டித்து, தொழுதுஅவரிடம் பணிந்துகேட்டால், வாஸ்த்தமாய்சொல்வார்அல்லாசிற்றை, வாசி யறிந்தவன்யோகியாவான், ஆஸ்த்தியாய்கண்டுநீங்கள்நன்றாய், அறிவை நினைவாகப்பொருத்திக்கொண்டு, மாஸ்த்தாய்வருகும் சொற்படிக்கு, மாறிஅறிந்தாக்காலபனுவுமாவாய்.

25 பனுவுமானவுடன்மறுபடியும், பாராதுன்னுடம்பை ஒருபோதிலும், மனுமிலும்மறதிஎன்ற, மாயமதைநீஎடுத்திடா தே, தனுவுடன்வருப்மூச்சாவது, தரித்து, ஹா, ஹீ, ஹூ, என் றேகி, அனஎன்றதானம்வந்து, அலறிமாத்தியே, ஹூஎண்டா க்கே

26. எண்டும்புகளதுதலங்கிவாழ்க, எடுத்துஉரைக்குறே ன்மனுமேவார்க்காக, கண்டுஅறிந்துகொள்திட்டமாக, கல்பில்மறக் காமல்வைத்துக்கொள்ளும், திண்டுமகிள்ந்திடும்தேனைப்போலே, திரேகம்பொன்னாகும்மண்திண்ணாது, உண்டுபடுத்தியகோலங் கண்டால், உண்மைவுஜூதிமேலம்சாலாமே.

27. சேரும்கருமங்கள்அறிவதர்க்கு, செப்புகுருனல்லா குறுஆனிலே, பாரும்(வமாகலக்கத்தல்ஜின்னவல்இன்சுஇல்லாலி எஃபுதூன்) என்றல்லாசொல்லி, நேரம்தவராமல்தவ்ஹீதுசெ ய்து, நினைவால்அறிந்துஈமாங்கொள்ள, சேரவேபடைத்தேன்ம னுவும்ஜின்னுமென, செப்புமுறைமம்தென்றல்லாசொன்னதாலே.

28. எண்டசொல்லுக்குநபிநாயகம், எடுத்துவுரைக்குறூர் இன்னம்சேதி, அண்டு(மன் அறபகபுசஹூ) பக்கது அறபறெப்பு ஹூ), கண்டுஅவரவர்நபுசுகளை, கருத்திலுறயவேவிளங்கிக் கொண்டால், செண்டகதிர்மதிஒளிவுபோல, சேரவிளங்கிடும்றப் பின்கோலம்.

29. கோலமாய்றெப்புஹூர்புகோர்த்து, குகயாம்செற்பத் திலானவுடன், காலமாம்அஹதுமுதல்வாஹிதாவாய், காணும் இன்சானுகவந்ததெல்லாம், ஆலமாமஉலகமீதில், அடியேன்செய் யிது இபுறுஹீம்எனுதுமிந்த, தூலமாம்ஆஷ்க்குமணிஅலங்கார, துலங்கும்மாலயில்பார்அறியலாமே

கலிமாவின் விபரம்.

30. அறியமனுவோர்க்காகஉலகமீதில், அடியேன்செய்யிது இப்றுஹீம்தான், பிரியமுடன்கலிமாசிற்றை, பிரித்தறியவுரைப் பதற்கு, சிறியேன்என்றென்னைத்தள்ளாமலே, சீக்கிரம்கலிமா வெளியில்வாரும், வறியமனுவோரும்சீமான்களும், வையகமீதி னில்அறிந்துகொள்ள.

31. கொள்ளுங்கலிமாவில்நாலெழுத்து, (காபுலாம்மீமலிபு) மாகும், விள்ளும்நாலெழுத்தின்பொருளைச்சொல்வேன், விள ங்கிஎடுத்துக்கொள்மறவாமலே, உள்ளும்வெளியிலும்கலிமாவா கும், உரைக்குறேன்கேள்விபரமாக, அள்ளும்முதல்எழுத்துக் (காபு)மாகும், அதுதான் இருபது சிபத்தாகுமே.

32 ஆகும்சிபத்துஇருபதையும் அடுத்த(லாம்)ஜிபுரீயில்தான ங்க, ஏகும்தூதராய்(மீம்)முஹம்மதுக்கு, எடுத்துவுரைத்திட்ட ரகசியமாப், ஆகும்கலிமாவில்(அலிபு)அல்லா, அவனால்இவைஎல் லாம்வந்ததென்று, சாகுமுதலேஅறிந்துநீங்கள், சாஷ்ட்டாங்கம் செய்துஈமாங்கொள்ளே.

85757

ஈமானின் விபரம்.

33. ஈமான்என்றதும்ஐந்தெழுத்து, இலண்டலிபுஎமீம்நூ னும்ஒண்ணு, கோமான்(அலிபெ)ண்டறிவதற்கு, கொள்ளும் (ஏ)இன்சான்வெளியாகிய, பூமான்முஹம்மது(மீமு)மாகி, புகழு ம்(அலிப)ல்லாவைக்கண்டதாலே, சீமான்ஒளிவதுபாந்துவீசி, ஜெகத்தில்(நூன்)நூறென்று அறியலானோம்.

97:41 435

இஸ்லாத்தின் விபரம்.

34. அறிந்தபடியேதான்இசுலாமானோம், அதிலும்ஐந்தெழு த்துஉண்டும்பாரு, பிறிந்துபோகாது(அலிபு)அல்லா, பிந்தியசீன் சிற்றதாகி, முறிந்துபோகாமல்(லாம்)என்றால், மூன்றெழுத்தும் ஒன்றாய்ப்பேசும், அறிந்துகொள்ள(லாம்அலிபுமீமின்)சிற்றை, அவரவர்செய்கிடம்அறிந்துபாரு.

35. பாரும்அவருடயசெயல்களாலே, படைத்தோன்சொல் லுக்குமாற்றமாவென்று, ஆரும்அலிபுலாம்மீமின்சிற்றை,அறிந்து சொன்னவர்என் குருவுமாகும், சேரும்உலகினில்நசீகத்தாக, செப்புகிறேன் ஒருசேதிஉற்றுபாரு, காரும்என தின்பாடல்யாவும், கருத்தில்அறிந்தவுடன்வளியைக்காட்டும்.

36. காட்டும்நபியுள்ளாமிஃறுஜினில்,,கற்றபெரியோனிடம் கேட்க்கும்போது, கூட்டும்இல்மெல்லாம்ஒன்றுய்ச்சேர்த்து,கொடுத்தான்நசீஹத்துவிளக்கமாக, பாட்டில்யானதில்கொஞ்சம்சொன்னேன், படித்தபின்நசீஹத்துவாங்கவேண்டும், ஏட்டில்இல்லை அந்தச்சேதி, எல்லாம்செய்கிடம்அறிந்துகொள்ளே.

நபுசுடன்பீசபில் செய்யும் விபரம்.

37. கொள்ளுங்குறு ஆனில்அல்லாசொன்னன், (குல்லுநபுசின் தாயிக்கத்துல்மவ்த்து)என்று, விள்ளும்நபியதைக்கண்டதாலே,விளங்கும்பீசபில்குபுறுவென்றுர், அள்ளும் அதன்சிற்றுவிளங்கியல்லோ, அடங்கலும்மவ்தாகுமுன்மவுத்தாகுமென்றுர், உள்ளும்பொருள்களையறியவென்றுல், உவந்துயான் அதைக்கூறக்கேளும்.

38. கூறும்உனதின்நபுசுஏனை, கொடியபீசபில்செய்துகொண்றுல், ஏறும்நபுசேளும்மவ்த்தாகினுல், இருப்பவன்இறயல்லால்வேறுமில்லை, ஆறும் ஹம்மாறு அதனின்குணம், அறவே இறைமீதுபிரியம்வைய்யா,வாறும்இறைமீதுபிரியம்வைத்தால்,வாளால்ஹம்மாறுமரணமாமே.

39. மரணமறிந்துலெளவாமாவும், மன்னேன் அருளினுல் ஹயாத்துமாகும், தரணமதினில் அதனின்குணம், தானேபெரிதென்றநாட்டம்வரும், வரணமதாய்நாப்பெரிதல்லவே, வல்லோன்நமக்குப்பெரிதேஎன்றுல்,சறணப்செய்துலெவ்வாமாமரணமாகும், ஜல்நியாய்ஹயாத்தாகும்முல்ஹிமாவே.

40. மாவேமுல்ஹிமாஹயாத்துமானுல், மாதாபிதாவைப்பெரிதாய்காணும், ஆவேகுறு ஆனில்அல்லாசொன்னன், அடங்கலைவிடஅவன்பெரிதேஎன்று, பூவேமரணம்முல்ஹிமாவும், புகமாய்ஹயாத்தாகும்முத்துமஇன்னு, சாவேமரணம்வருகுமுதல், சங்கைறஹ்மானைவணங்கவேணும்.

41. வேணுமென்றநாட்டம்வந்தால், விளங்கும்குறு ஆனில்அல்லாசொன்னன், கானும்(யாஅய்யத்துஹன்னபுசுமுத்துமஇன்னதுறுஜிஃஈஇலாறப்பிக்கிறுளியத்தன் மறுளிய்யாபதுகுலிபீஇபாதீவதுகுலீஜென்னத்தி) என்றல்லாசொன்னன்.

42. சொன்னஆயத்தின்சிற்றாகளே, சொல்லவில்லேஎன் கவியின்மீது, முன்னஒருநாள்அஹதிய்யத்தில், மனுஜின்னுயிரெ வ்வகையும்முன்னில்வைத்து, பின்னக்குறுஆணகவெளிப்படுத்தும், பெரியவேதத்தைஎடுத்துக்காட்டி, என்னசொன்னுன்என்ருல் ஆதிநாயன், எடுத்துஉரைக்குறேன்உலகத்தோரே.

43. உலகில்யாபேரும்அறிவதற்கு, உயர்ந்தகுறுஆனில் அல்லாசொன்னுன், விலகிடா (அற்றஹ்மான்அல்லாமல்குறுஆன் கலக்கல்இன்சானஅல்லமஹுல்பயான்) திலகிடாதிதனின்சிற் றை, தெரியவுரைக்குறேன்மனதால்ப்பாரு.

44. மனமறிவதற்குச்சொல்லுகுறேன், மக்காள்அதைக் கேழ்ஹக்கதாகவே, தினம்(அற்றஹ்மான்) எல்லோர்க்கும், தீர்புஒன்றுபோல்கிருபைசெய்வோன், கனம்(அல்லமல்குறுஆன்) என்ருல், கருத்துநமக்கருவேதமாச்சு; அனம்(கலக்கல்இன்சான்) றாஹூகொண்டு, அடங்கலயும்அல்லாஹயாத்தாக்கி.

45. ஆக்கிமுன்னிலேதானும்வைத்து, (அல்லமஹுல் பயான்)என்றல்லாசொன்னுன். வாக்கிஉங்களேத்துன்யாமீதில், வாழ்வுபறக்கத்தாய்வைக்கப்போறேன், தாக்கிமனம்போலேகட க்காமலே, தனியோன்யானென்றுபயந்துகொள்ளும், சாக்கிநம் யாபேருக்கும்கியாமநாளில், சரியாய்குறுஆன்என்றல்லாமுன்னில் வைத்தான்.

46. வைத்துமுன்னிலேபயானும்செய்து, வள்ளல்முஹம் மதைநபிஎன்றோதி, அய்த்தகுறுஆன்வேதம்தன்னே, அடங்கலும் பிரியமாய்க்கேட்டிருந்தோம். சைத்துஎன்னில்இருந்துநீங்கள் சரியாய்க்குறுஆனேப்படித்ததாலே, மெய்த்ததுன்யாவில்சென் றுநீங்கள், மேன்மையுடன்எனேவணங்கிவாங்கவென்றுன்.

47. வாங்களிதுபோலமஃஷர்கூடி, வாயால்பேசுவதும்குறு ஆன்பாஷை, நீங்கள்துன்யாவில்சென்றுபார்த்தால், நிலேத்தபல பாஷைஉண்டுமெங்க. நாங்களெல்லோரும்வணங்கும்போது, நாட் டம்ஒன்ருகஇருக்கவேண்டும்; போங்களெனறப்பு அனுப்பியதால், புகழாய்உலகினில்வந்தோம்பாரு.

48. வந்துஉலகினில்இருக்கும்நாளில், வாயால்பேசுவதும் அறியமாட்டோம், சிந்துகவிகளும்பாட்டிராகம், செப்பத்தெரி யாமல்இருக்கும்நாளில், விந்துவிளேந்துநாதமாகி, விரிந்தநரம் பெங்கும்ரெத்தமேறி, சந்துமொளிஎங்கும்வலுவுண்டாகி, சரி யாய்இன்சான்என்றஅறிவைக்கேளும்.

நான் உண்டான விபரம்.

49. கேளும்உமதடிமைஇந்தப்பாவி, கிருபையுடன்இருந் தஅஹதிய்யத்து, நாளும்மரம்மட்டைபுற்பூண்டிலும், நடக்கும் மிருகம்பலதானிய்யத்தில், வாளும்சமதாகஇருக்கும்போது, வா காய்யதுகளேஎன்தாயும்தந்தை, கூளும்கறிகஞ்சிசோறுமாக்கி, கூடி இருபேரும்எனே அருந்தினர்கள்.

50. அருந்திவாயினுள்செண்டபோது, அங்குஅதனுடைய சத்தஎல்லாம், வருந்திமேல்நாக்குஅருந்தியதை, வந்தமூளை முனைதன்னில்சேர, பொருந்தும் இருவிளிப்பார்வையாக, பொங்கும்ஒளிவதில்நின்றிலங்க, திருந்தியபுத்திஅக்கில்கூர்மை, திங்களொளிவுபோலிதைச்சொல்லார்களே.

51. சொல்லுமதன்பின்சக்கஎல்லாம், சோதிபெரியவன் அருளினாலே, வெல்லும்படியதைவேகவைத்து, வெவ்வேறாய்ப் பிரித்துஇன்னும், அல்லும்பகலும்தெளிவுகண்டு, அடர்ந்தநரம் பெங்கும்பாச்சிமிச்சம், நில்லுமெனச்சொல்லிப்பிரிவுகண்டு, நிசமாய்ஒருதுள்ளிநுத்துபாஎடுத்தான்.

52. எடுத்துஎன்தந்தையாரின், இலங்கும்மூளையில்கொண்டுவைத்து, அடுத்தபடிஎன்தந்தையார்க்கு, அவனாஷையிலொரு துள்ளியமுதூட்டியே, கொடுத்தஆஷையால்மோகமாகி, கொண்ட நினைவினில்உதிப்புண்டாகி, விடுத்தமலர்விளிமஃஷூக்கைகண்டு, விரைவாய்வரச்சொல்லிஅளைத்தார்களே.

53. அளைத்தமஃஷூகுமுன்னில்வர, அதில்ஆஷ்க்கு மோகமாகி. வளைத்தவில்லம்புவீசுமாப்போல், விரும்பிஇரண்டும் அணையும்போது, முளைத்தகனிதனில்இருந்தும்அங்க,முந்தச்சிர சினில்வந்திருந்த, விளைந்தமணிசூடுநாதமாகி, வெளியில்வந்திட ஆஷையாச்சே.

54. ஆசையால்மோகம்கொதிப்புண்டாகி, அந்தநினைவினில் மிதாலைக்கண்டு, ஓசையாலதுஒளிவுண்டாகி, ஓடிநிறைந்தெங்கும் தம்முமாகி, பாசயால் நம்மைப்படமும்செய்து, பளிங்கிரூபம் போல்தெளிவுண்டாகி, வாசியாய்உள்நுளைந்துகொண்டு, வாரி எழுந்தல்லோநடையிலாச்சே.

55. நடயீலேகியஅன்னமாகி, நடந்துவந்திடக்கோலமாகி இடயில்லாமல்வளிந்துவிந்தாய், இலங்குங்கலத்தின்முனயில்வர, சடயில்லாமல்இறயோன்சிற்று, ஜல்தியாய்எகுமெண்டுறுக்கும் போது, தடயில்லாமல்கெற்பமீதில், தனித்துநுத்துபாவாய் வந்திருந்தோம்.

56. இருந்துஅவ்விடம்தன்னைப்பார்த்து, இலங்கும்அஹ துஹ்அவாஹிதென, பொருந்துமுச்சுடரும்ஒண்ணாய்க்கூடி, பொங்கிஅதனுள்ளிருக்கும்போது, வருந்திவணங்கியசூடுண்டா கி, வந்தஇடத்தினில்நினைவுமாகி, அருந்தும்சுவைஹூவல்லா வென்று, அப்போதுஆலமுல்அறுவாஹாச்சே.

57. ஆலம்அறுவாஹாய் அங்கிருந்து, ஆகும்தலத்தினில் மிதாலைக்கண்டு, கோலமில்லாமலேமிதாலைநாடி, கொழுகியத னுள் தேடிஓடி, காலம்முழுதுமேகணக்குண்டாகி, கருவும்நினை வுமாய்திரண்டநாதம், ஏலமதுவாகஅரூபியோசை, எழுந்து மதிலப்போகுல்லெண்டாச்சே.

58. எண்டவுடன்தில்வாய்கண்காதுமூக்கு, எதுமொரு சிபத்தில்லாமலே, கண்டஇடத்தினில் சொன்னபேச்சு, கருத்தில்உரைப்பதர்க்குயாருமுண்டோ, தொண்டுபணிவிடைசெய்வாரில்லை, தொகுத்தறப்பல்லோசோல்லவேண்டும், செண்டுநாமிருந்தகோலம்தன்னை, செப்புமெனச்சொல்விக்கேட்டதாலே.

59. கேட்டபோதினில்ஜவாபுசொல்ல, கீர்த்திபெற்றோர் ஒருவரில்லை, நாட்டம்போலவேமிதானுமாகி, நாடிவருவதுகோலமாகி, கூட்டம்அவனல்லால்வேறாமில்லை, கூடியணைந்திருக்கமஃஷூக்கில்லை, தேட்டம்அவன்மேல்ஆசையாகி, தினமும்குல்லென்றசொல்லுண்டாச்சே.

60. சொல்லஒருவரும்இல்லாமலே, சூலாய்அதனுள்தம்முமாகி, அல்லும்பகலுமே(குல்) (குல்)லென்று, அடங்கிஇருக்கஇடமில்லாமல், வல்லமைகொண்டுஅஜ்சாமாகி, வெளியிலேகிடத்தட்டிமுட்டி, சொல்லமுடியாத(ஹூ)என்று, சுளித்துவெளியிலேவந்ததாமே.

61. வந்தவளியதைச்சொல்லவில்லை, வந்துஎன்னிடம்கேட்டுக்கொள்ளும், சிந்தில்உரைத்திட்டால் கோபங்கொண்டு, சினத்துப்பேசுவார்ஷைய்குமார்கள், முந்தவுரைத்தந்த(ஹூ)வானது, முங்கிளங்கும்தேடிப்பார்த்து, விந்தைபெறுமந்தமீமைச்சேர்த்து, விரிவாய்அதனுள்வந்துஇருந்ததாமே.

62 வந்துஉள்ளிலேஹேயும்மீமும், வணங்கிஹூம்மென்றுதம்மிலாகி, முந்தமகிள்ந்தஆதம்ரூபம், மன்னோன்அருளினால் அமைக்கவென்று, விந்தைபெறுமந்தஅஹதுஹாதும், விரும்பிஅணைந்தங்கேஇருக்கும்நாளில், சிந்தைதெளிவினில்உதிப்புண்டாகி, சிறந்த ஆதம்பிறந்தாரங்கே.

63 பிறந்தமுச்சுடரும்ஒண்ணாய்க்கூடி, பெரியோன்அறுவாஹூஆலமாச்சு, சிறந்தமிதால்கொண்டேமது, சிறப்பாய்க்கண்காதுமூக்குநாக்கு, அறிந்தபடியேதான்மிதாலைக்கண்டு, அந்தஇடத்தினில்உறுப்புண்டாகி, தெரிந்தஹூவும்மீமுங்கூடி, தெளிவாய்ஹூம்மென்றுஉறுக்கியதே.

64. உறுக்கும்போதினில்கோபமாகி, உடல்கள்யாவும்நிறப்பமாகி, பெருக்கும்அஜ்சாமாய்வெளியில்வர, பெரியோன்இன்சான்கோலம்பார்த்து, நெருக்கமிதிலிருக்கமுடியாதினி, நேரவெளிவரவேணுமென்று, இரக்கமிகக்கொண்டுஹூவானது, இறுக்கிஹூம்மென்றுஉறுக்கியதே.

65. எண்டுஉறுக்கிடவாயானது, இலங்குமதுஇருபிளவாகிய, அண்டுஇருந்தநூறைக்கண்று, அல்லாஹூஎன்றோதும்பாரு நின்றநிலயினில்முன்னைப்பார்த்து, நிலைத்தஅஹதுஎன்று ஓதும் வாய்ந்தான், கண்டுஒருவனால்இன்சானான, கருத்தைப்பொருத்தியபார்க்கும்போது.

66. பார்க்கும்போதினில்இறைஒளிவு, பாரவுலகெங்கும் பரந்துவீச, ஆர்கும்புகள்பெற்றஅல்லாநூறை, அந்தஇடத்தினில்கல்புபார்த்து, சேர்க்கும்படி(அல்லாஹுஸ்மது)என்று, செப்பியதுஆலமூல்அஜ்சாமாகி, கார்க்குமிந்தப்பிரிவுகளை, கண்டல்லோ நாம்இன்சானானோம்.

67. ஆனஇன்சான்தான்அவ்வயிற்றில், அனைத்தும்அவனாககண்டதினால், தானஇறைஎண்றநாட்டங்கொண்டு, தனித்துலம்பியலிதுஎன்றாசொன்னான், நானதானாகஅமைந்தோமென்று, நாடி(வலம்யூலது)என்றாசொன்னான், சீனாகமறைந்திடும் (வலம்எக்குன்லஹு,) ஜிகத்தில்(குபுவன்அஹதென்)றுவந்தான்.

68. எண்டுப்புகளதுதுலங்கிவாழ்க, எளுந்தஉடலெங்கும்(ஹுவல்லாஹு), கண்டுமீமானமாவைப்பார்த்து, காணும்உடல்யாவும்முடித்துவிட்டோம், செண்டுஇருந்திடும்உடலின்மீது, செய்துமுடிந்தகடைசித்தலம், அண்டுமுஹம்மதோடுஆஷ்க்காக, அணைந்துபிரிந்தல்லாலாவுமானான்.

69. ஆனாலறியுங்கள்முஃமீன்களே, ஆதிபெரியோன்நம்மைஅமைத்தகோலம், தீனாலுயர்ந்தவர்முஹம்மதுவாம், தீனில்பிறந்தவுடன்இன்சானாகார், தானால்வளர்ந்திடும்அலிபுநீண்டு, தாங்கமுடியாதஒளிவுமாகி, சீனால்மறைந்திடும்பய்த்துல்மஃமூர், சிங்காசனத்துள்மறைந்ததாமே.

70. மறைந்தமஃமூறுமூளையாகும், மங்காஒளிவதுகல்புமாகும், நிறைந்தசிங்காசனத்தினில்கொலுவீருந்து, நீதிபிசகாமல்ஒதுமாதி, உறைந்தபலபலபடைப்பஎல்லாம், உருவஅரூபமாய்அமைத்துவிட்டு, கறந்தபாலினுள்வெண்ணெய்போல, கள்ளன்யான்என்றுஒளித்துக்கொண்டான்.

71. ஒளித்தான்இறையவன்உலகம்மீதில், ஒருவரும்அறியாதிருக்கவென்று, விளித்தநினைவுடன்மூளித்தபோக்கு, வீசும்ஒளிவாகத்துலங்கும்பாரு, களித்தசுவாசத்தைநினைவுமாக்கி, கண்ணைமூடியபார்த்தாயானால், பளித்தபளத்துள்ளின்பம்போல, படைத்தபெரியவன்மூச்சிலாவான்.

72. மூச்சிறூஹ்மாய்ஒளிவிலங்கி, முந்தமுளித்தாக்கால்பார்வயாகும், பேச்சிவந்ததுநினைவினாலே, பேசிலிக்காஆறப்பிஎன்று, காச்சிநினைவினில்வெண்ணெய்கண்டால், கருணைக்காதினில்கேழ்வியாகும், ஆச்சிஇதுவெல்லாம்வந்தவளி, அல்லாஒளிவினில்இருந்துதானே.

73. தானேதானாகஅமைந்தசோதி, தங்கும்உலகினில்இருக்கவென்று, வானேஎளாம்மறுத்தபாவில், வந்தஇன்சானுள்மறைந்ததினால், ஆணோபெண்ணோஅறியொண்ணாது, அல்லாமறைந்ததின்ரகசியத்தை, ஏனோநமக்கிந்தப்பேச்சிவேண்டாம், எளுந்தநம்உடலைப்பார்ப்போம்.

74. பார்க்கும்போதினில்இருகண்களாக, பார்வையதனாலே கொளுகிப்பாரு, கார்க்கும்நிறமய்ந்திருப்பதாலே, கன்சுல்மஃபிய்யா இருளறயாம், சேர்க்கும்இருவிளிநடுமத்தியில், செல்வநுக்கத்தா அதனைவைத்து, ஏர்க்கும்படியதைவளைந்திருக்கும், ஏகநிறமல்லோபஞ்சபூதம்.

75. பூதமய்ந்தயும்பிடித்தடைத்து, பூங்காவனம்போல்தெளிவுண்டாக்கி, வேதம்தனில்(நூன்)நூறென்றோதி, வெளியில்நான் என்றளளுத்துமாகி. ஆதம்நபிமக்கள்அனைவோர்க்கும், அறியப்பறுளாகுமென்றுஓதி, நீதம்போலவேஇதனின்சிற்றை, நீதான் அறிந்துக்கோஷைகைதேடி.

76. தேடி அறிவதற்குமுன்னுள்ளோர்கள், தெரியாதொருவர்க்கும்மறைத்தசொல்லாய், பாடி இருக்குறூர்பலஞானியும், பாவைசூஸ்த்திரம்அறியச்சொல்லி, நாடிஞேர்கட்குஇன்பமாக, நாயனருளினுல்அவுழ்த்தச்சொல்வேன், வாடிமயங்காமல்அறிந்தபேர்கள், வாயால்மொளிகேட்கவந்தாராஞல்.

77. ஆனல்பைத்துல்மஃமூருவது, ஆகும்மூளயாம்தவ்ஹீதுலே, தாஞம்சிதறத்தல்மூன்தஹாவும், தாங்கும்தலைக்குளிமறுவாவென்றும், வானம்புகல்அறுஷிநெத்தியாகும், வளரும்புருவமேகுருஷாமென்றும், ஈனமணுகாதகாபக்கபுசையின், இலங்கும் இருபுருவத்தின்இடயாமெண்ருர்.

78. இடயாம்இருவிளிநடுமத்தியில், இலங்கும்ஒளிவல்லோகுதிசியாகும், விடயாம்அதனின்புகளைக்கண்டால், விளங்கும்பவமெல்லாம்பறந்துபோகும், உடையாய்இதைஅறியாதவர்காபிரென்று, உண்மைமுகம்மதுநபியும்சொன்ஞர், நடயாய்இதன்சிற்றைச்சொன்னநாஞல், நாட்டில்ஷைய்குமார்பிடித்துக்கொள்வார்.

79. பிடித்தால்என்னைக்குற்றமில்லை, பிந்திச்சொல்வதுயானறியேன், அடித்தால்அவர்களைப்பாவத்தாலே, அல்லாமுனிவினுல்யதுஆச்செய்வான், படித்தால் உள்ளதைச்சொல்லச்சொல்லி, பாங்காய்ருறுஆனில்அருளிசெய்தான், துடித்தஉயிர்என்னில்இருக்கும்வரை, துணிந்துசொல்லுவேன்அறிந்துகொள்ளும்.

80. கொள்ளும்குருஆனில்அல்லாசொன்ஞன், கொளுந்துவளர்ந்துஉன்விளிஇல்வந்து, துள்ளும்பார்வையால்உலகைப்பார்த்து, துன்பமணுகாமல்நடத்துமாதி, விள்ளும்படியாகவிளிநடுவில், விரிந்துஇலங்கும்ஒளிவினுலே, அள்ளும்வளியவராவர் உடலைக்காண, அறிவுஇதைப்போல்உலகிலில்லை.

81. இல்லையெனச்சொன்ஞர்நபிநாயகம், இருவிளியின்ஒளிவைப்போல, தொல்லையில்லைஅறிவதற்கு, தொட்டுத்தொட்டதைபுட்டுச்சொன்னேன், வில்லைவளைத்துநல்லம்பைப்பூட்டி, விளங்கும்நினைவினுல்எய்துபாரு, கல்லைஉடைத்தெறியும்இம்மத்தாவது, காணும் நுணிமூக்கு முஹையித்தீனும்.

82. திணம்பாத்திம்மாகுட்டிநாக்கு; திரும்பெருநாக்கு கலழுமாகும், வாணுமதன்மேல்முராசாவது, வாகுபொருந்திய லௌஹாமென்றும், தாணும்குரவளையதனின்நீரு, தானேகலைத் திற்குமய்புமாகும், மாணும்தொண்டைக்குளியாவது, மாதேறா ஹதின்வீடாகுமே.

83. வீடாம்வலழுலைசபாமலை, விளங்கும்இடமுலைமறு வான்மலை; ஈடாம்அதனிடைப்பள்ளமாவது; ஈன்றமுஹம்மதின் கபுறிஸ்தானம்; கூடாம்பய்த்துல்முக்கத்திசுதான்; கூறும்தாமரை உள்ளொளிவாம்; ஏடாமதன்மேடாவது; ஏகன்றகூஉள்ளாமதீ னமென்றூர்.

84. என்றும்பற்குக்திமண்ணுமாகும்; ஏகும்கருஈரல்தண் ணீராகும், சென்டநராஈரல்காத்துமாகும்; செப்புகுறேன்பித்து நெருப்புமாகும்; உண்டுமெனச்சொன்னல்இந்தநாலும்; உஜூது இல்முநூறுஷாஹூதுமாகும், விண்டஇவைநாலும்உந்தன்மீ து, விளங்கும்நிறம்நாலும் க்ண்ணுகுமே.

85. நாலாம் நிறத்தினில்இருக்கும்கண்ணில்; நல்லாத்தெ ரியுதூபாரும்அங்க; காலாம்வெள்ளைமண்ணுமாகி; கருவாய்வளை ந்தல்லோஅதனைக்காத்து; வாலாம்அதன்அருகாமயாய்; வாளும் சிவப்பல்லோதண்ணீராகி; நூலாய்வளைந்திருக்கும்பச்சைநிறம்; நுவலும்காத்தாகஇருக்கும்பாரு.

86. இருக்கும்இடத்தினில்கறுப்பூநிறம்; இலங்கும்நெருப் பல்லோவுற்றுப்பாரு; பெருக்கும்அவ்விடம்நாலனுசிற்றும், பேசி ஒரிடம்இருப்பதாலே; உருக்கமதனின்சிபத்தைக்கண்டு; உள் ளில்இருக்கின்ற விளிமைப்பாரு; நெருக்கமக்காமுஹம்மதுவை; நேசமாய்வைத்தான் அத்தலத்தில்.

87. தலத்தில்வைத்துமிகபோதனயாய்; தாஹாமுஹம்ம தேஉலகைத்தோர்க்கு; குலத்தில்உயர்த்தியாய்வைத்ததாலே; கோ பவினைஒன்றும்செய்யாதுண்மை; பிலைத்தில்உமைமிஜயிக்கயாரு மில்லை; பெரும்முஹம்மதுஎன்றுமாலைசூடி, நிலத்தில்இன்சானின் திரேகமீதில்; நேரேஇருந்திலங்கவைத்தானல்லா.

88. வைத்தான்பதினைந்து அடயாளமாய், வையமனுஷீவார் களறியவிதி, மெய்த்தான்அதில்மமைஜமைஇல்லைஎன்று, மேகம் குடைநிளல்அடிப்பதியா, சைத்தான்நகமோமம்வளர்ந்ததில்லை, சயிக்கத்துயிலாடைகளயவில்லை, கைத்தகல்புமறந்ததில்லை, கை யுடல்முளுதும்கண்டோரில்லை.

89. இல்லைஉலகினில்அவர்கள்மீது, ஏதுமொருபுளுப்பூச் சிஅண்டவில்லை, தொல்லைசெய்திடும்பகையாளர்கள், தோய்ந்த அடிகளைக்கண்டதில்லை, எல்லைமனுஷீவார்கள்மனம்பூரிக்க, எங்கு ம்வீசுமேகஸ்தூரியாய், அல்லஅவர்சிரம்அறுசின்மீது, அடர்ந்த இருபாதம்தருத்தருவாம்.

90. பாதமிரண்டினுடன்பதினைந்தையும், பாரிலறிவதுகடனுமாகும், போதமணுகாமல்கண்டுகொள்ள, போற்றுமிறயருளால்இங்குசொல்வேன், வேதமாம்நம்குர்ஆனிலே, விரிவாய்அல்லாசொல்லதனைக்கேளும். ஓதும்(நூன்வல்கலமிவமாஎஷ்த்துறான்மா அன்தபிநிஃமத்திறப்பிக்கபிமஜ்நூன்)என்று.

91. என்றுவுரைத்திட்டசொல்லைக்கூட்டி, இலங்கும்நூனினுலெய்துபாரு, கண்டுகொள்ளுவாய்அடயாளத்தை, கல்பில்மறக்காதவைத்துக்கொள்ளும், செண்டஅடயாளம்பதினைந்தயும், சேர்த்துக்குன்னென்றுஓதிப்பாரு, விண்டுஅறிகுவாய்கண்ணினுலே, விரிந்தசுடரொளிவுவெளியில்வீசி.

92. வெளியில்இவ்விதமாய்உடலைச்செய்து, வெட்டவெளிச்சமாய்ஒளிவைவைத்து. மொளியில்முதல்உதித்ததலம், மோசமிலைமூளமுனையிருகண்ணுமாகும், விளியால்உருவெல்லாம்நிறப்பமாகி, விரிந்தசுல்பில்முடித்தானல்லா, ஒளிவாய்அமைந்தறூஹானது, ஒளித்தஇடமல்லோகடைசித்தலம்.

93. தலமாம்கடைசியாய்முடிந்ததானம், தவத்தில்சிறந்தாம்கலிமாவிலே, நலமாம்ஹூவுப்மீமுங்கூடி, நடத்தும்கருமங்கள்முடித்துக்கொண்டு, பெலமாம்தலத்தினில்தரிபடுத்தி, பெருங்கலிமாஎன்றநாமங்கூறி, குலமாம்ஹூவும்மீமுங்கூடி, குறித்ததலத்தினில்பிரிந்ததாமே.

94 பிரிந்ததானம்தான்விளங்கிக்கொள்ள, பிருவேணுங்காண்உலகத்தோரே, தெரிந்ததலத்தினில்இருந்தகோலம், தேடக்கிடயாதுஉம்மத்தோரே, விரிந்தபெரியோர்கள்அவுள்த்தூரைப்பார், விளங்காதவர்சொல்லமாட்டார், தெரிந்தபடிக்கிதில்கடுகுபோல, திரையைவைத்துயான்மறைவாய்சொல்வேன்.

95. மறைவாய்இரிக்குதுவுலகமீதில், மதிக்கமுடியாதுஒருவராலும், முறயாய்இருக்குதுஆதம்ஹவ்வா, மொளியும்முஹம்மதுமுஹையித்தீனும், உறைந்துஇருக்குதுறூஹில்குதுசும், ஒளித்துஇருந்திடும்தலமுமாகும், இறயாய்உதித்தவன்ஏழுகடலை, இதமாய்க்கடுகுக்குள்அமைத்தவாறாய்.

96. அமைத்ததானநகான்உந்தியாகும், அதுலேசுவாசமிருந்தெளும்பூவதாம், சமைத்தகுகயதசுல்புமாகும், ஜடலமளிந்திடும்மண்தின்னுது, இமைத்ததான்ந்தான்குறுஆனிலே, இறயோனுரைசெய்தான்அறிந்துகொள்ளும், நமைப்புகள்ந்து, (எஃறுஜ்மின்பைனிசுல்பிவந்தருயிபு)என்றே.

97. என்றசொல்லுக்குநபிநாயகம், எடுத்துவுரைக்குறூர்இன்னம்சேதி, அண்டு (மன்அறபநபுசஹூபக்கதுஅறபறப்புஹூ)என்று. கண்டுஅவரவர்நபுசுகளைக், கருத்தில்உறயவேவிளங்கிக்கொண்டால், சென்றகதிர்மதிஒளிவுபோல, சேரவிளங்கிடும்றபின்கோலம்.

98. நப்பாய்வந்தவன்நினைவினாலே, ரகசியப்பொருள்தந் தேன்அள்ளும்செம்ப, தப்பாய்போகமல்நீங்கள்தானும்தனித்து சுஜூதுசெய்துகொண்டு, ஹப்பாய்இருந்துநாம்இறந்தமானால் உடயோன்சுவனத்தில்சேரலாகும், மெய்யாய்அவனுடயகிருபை யாலே, மேலோன்துறைமுகம்அய்ந்தைக்கேளும்.

99. கேளும்முதலாம்துறயாவது, கிருபையுடன்சக்கிருத் துமவத்துமாகும், ஆளும்இரண்டாம்துறைகபுரிஸ்தானம், அடுத் தமஃசறுமூன்றும்துறை, வாளும்துறைநாலுதராசுமீசான், வளரு ம்துறைஅய்ந்துசிறுத்துமாகும், மீளும்துறைமுகம்அய்ந்தைதா ண்டி, மேலோன்நபிதிருமணம்பார்க்கவேன்றும்.

100. பார்க்கும்இடத்தினில்என்தாயும்தந்தை, பாவிஎன் றென்னைதள்ளாமலே, சேர்க்கும்படியல்லாகிருபைசெய்து, சரி யாய்அவர்கள்என்குருவுமாகி, கார்கும்கியாமநாளில்அல்லாமுன் னில், கடத்தியேபலபாவம்நீக்கி, ஏர்க்கும்படியேதான்சுவனம் சேர, இறயோனநீகிருபைசெய்வாய்.

101. செய்யும்கிருபயில்முதலதாக, சொல்லுகிறேனென் தாயும்தந்தை, வையகம்தன்னில்செய்தபாவம், வல்லவாபொருத் திரங்கவேணுமென்று, கையைஏந்தியான்கேட்குகிறேன், காசி னியில்என்மனைவிமக்களையும், துய்யோன்கிருபையால்காத்துஎன் றும், துன்பமணுகாமல்இருக்கவேணும்.

102. வேணுமென்றுயான்கேட்பதாலே, விளங்கும்றஹ் மானேகிருபைசெய்து, காணும்எனதின்மனைவிதானும், கருத்தி விதைமிகப்பொருத்தமாகி, பேணுவோமெனஅச்சியிலியற்றவெ ன்று, பிரியமாய்ப்பொருளுதவிசெய்ததாலே, தோணும்ஜென்ன த்துல்பிருதவ்சில்சென்று, தோளர்முஹம்மதின்உம்மத்தாக.

103. ஆகும்உம்மத்தோர்அடங்கலையும், அவர்ரவர்களின் பாவம்நீக்கி, ஏகும்ஜென்னதுல்பிறுதவ்ஸில்சேர, யாபேரும்து ஆக்கேளுமென்று, போகுமுதல்நபிநாயகம்தான், புகளாய்சஹா பாக்களுக்கருளிச்செய்தார், சாகுமுதல்இதைஎல்லோர்க்குமே, சாற்றுமென்றுநபிசொன்னதாலே.

104. சொன்னதால்யானதைசொன்னேன்அல்லா, சும்மா என்னைநீவிட்டிடாதே.உன்னைஎன்முன்வைத்துஉரைத்தேனல்லா, உவந்துஎன்பாவம்நீபொறுப்பாய், என்னசெய்தாலும்றப்புஎன் னை, எடுத்துநரகத்தில்எறிந்திடாதே, சொன்னசெய்யிது இப்ரு ஹீம்கியாமனாளில், சோதிநபிஉம்மத்தில்சேரஆமீன்.

முதல்பாகம் முற்றிற்று.



இரண்டாவது பாகத் துடர்ச்சி.

முஹைறயித்தீன்முஃறுஜாத்து.

பிஸ்மில்நின்றிலங்கும்மீமதன்சிற்றைக்கூற
இஸ்மனைவிட்டகற்றிதுய்யவன்கிருபைகொண்டு
அஸ்மதாய்வந்துதித்தஆதியேநல்லொளிவாய்
இஸ்மதன்ஜலாலிய்யத்தில்இலங்கும்யாமுஹைறயித்தீனே. (1)

முஹைறயித்தீன்என்றதில்வரும்மீமதன்சிற்றைநாடி
திகையுடன்எழுத்தைக்கூட்டிதுடரவேமீமதாக்கி
வகைஎல்லாம்குறைந்திடாமல்வந்தென்னைகாருணைய்யா
மிகையதுவராதுஎன்மீதுமணியாம்முஹைறயித்தீனே (2)

மணியாய்இருக்குமுதல்பேயதன்நுக்கத்தாகி
அணியாய்நெளிந்துமதிஅலிபதன்கோலம்பெற்று
நுணியாய்இருபிறமும்நூதனம்ஆஷ்க்குமஃஷூக்கும்
துணிவோடுசுக்கூனாகதுலங்கும்யாமுஹைறயித்தீனே. (3)

சுக்குனோடுகூடிசுத்தியஆஷ்க்குமஃஷூக்கும்
சிக்கியபிடித்திடாமல்சேர்ந்துசுக்கூனாகஓடி
வெக்கியமனம்வெறுத்துவெவ்வேறாய்திரும்பியோட
தக்கியஇரண்டும்மோததானலிபாம்முஹைறயித்தீனே . (4)

தானதுஅலிபுமாகிதரித்தஇடம்நுக்கத்தாகி
மானதுவாயிலங்கவந்தமறையதில்மீமுமாகி
கானதுவாயுலகில்வந்தகலிமாவினுள்ளுறைந்து
தீனதுவாமீமின்கோலம்உண்மைதிங்கள்யாமுஹைறயித்தீனே (5)

உண்மையாய்மீமின்கோலம்உவந்துஎன்கல்பில்கண்டேன்
அன்மையாய்அலிபைநாட்டிஅதன்பின்ஹறுபால்கட்டி
தன்மையாய்இன்சான்என்றதன்கோர்வைக்கோலம்தன்னில்
மன்மையாய்அலிபைஅறியமன்றுடும்யாமுஹைறயித்தீனே. (6)

வேறு.

பார்க்கவேயான்இன்சான்படம்
பதித்துவைத்தேன்முதல்பாகமதில்
சேர்க்கவேஇரண்டாம்பாகம்பாடி
7செப்புகிறேன்அதனின்சிற்றை
தீர்க்கமாய்அறிந்துகொள்வதர்க்கு
தினமுமெதிர்பாருங்களென்று
கார்க்கவேசெய்யிதுஇப்றூஹீமின்
கவிஇதுவாகுமென்றறிகுவீரே.

இன்ஷா அல்லா

கூடிய சீக்கிரம்

மற்றபாகங்களும் வெளிவரும்.